13. Sri K. Cheemaichami.
14. Sri V. Krishnamoorthi.
15. Sri S. Muthulingam.
16. Sri Kanchi Manimozhiar.''

The motion was put and carried.

(2) THE LAND IMPROVEMENT LOANS (MADRAS AMENDMENT) BILL, 1964 (L.A. BILL No. 8 OF 1964).

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on behalf of the Hon. Minister for Works, I move—

"That the Land Improvement Loans (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 8 of 1964) be taken into consideration.''

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது இருக்கின்ற லான்ட் மார்ட்கேஜ் சட்டப்படி கடன்களை லான்ட் மார்ட்கேஜ் பாங்க் கொடுத்தால், முதல் சார்ஜ் உண்டு என்று சட்டம் இருக்கிறது. அதே போன்று லான்ட் இம்ப்ரூவ்மென்ட் சட்டத்தின்கீழும் அதாவது 1883-வது வருஷத்தில் இயற்றப்பட்ட சட்டப்படி, கடன் கொடுத்தால் சர்க்காருக்கு முதல் சார்ஜ், அதாவது முதல் பிரையாரிட்டி

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

இருக்கிறது. இதனால் லான்ட் மார்ட்கேஜ் பாங்க் கடன் கொடுத்த பின்னாலும், லாண்ட் இம்ப்ரூவ்மெண்ட் பிரகாரம் கடன் கொடுத்திருந்தால் சர்க்காருக்கு முதலிடம் இருந்தது, அதன் பின்னால் கோவாப்ரேட்டீவ் பாங்க்-க்கு இரண்டாவது இடம் போய்விடுகிறது. லான்ட் இம்ரூவ்மென்ட் ஆக்ட் பிரகாரம் கடன் கொடுத்தால், அந்தக் கடன், லான்ட் மாட்கேஜ் பாங்க் கொடுக்கின்ற கடனுக்கு பின் தங்கியதாக இருக்கும் என்கின்ற திருத்தத்தை இப்போது கொடுத்திருக்கிறோம். அதேபோன்று கூட்டுறவு சங்கங்களிலும் அடமானம் மாதிரி வைத்து கடன்கொடுத்திருந்தால், அதாவது அவர்களுடைய நிலம் அல்லது ஸ்தாவர சொத்துக்கள் இவைகளின்மீது கடன் கொடுத்திருந்தால், அந்த சொத்துக்களின் மீது லான்ட் இம்ப்ரூவ்மென்ட் ஆக்ட் பிரகாரம் கடன் கொடுத்திருந்தாலும் கூட்டுறவு சங்கங்களுக்கு முதல் சார்ஜ் இருக்கும் என்ற சட்டத்தையும் இதன் மூலம் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நில திருத்த சட்டத்தின்கீழ் கடன் கொடுக்கப்பட்டிருந்தாலும், கூட்டுறவு சங்கங்களிலிருந்து கடன் கொடுக்கப்பட்டிருந்தாலும், கூட்டுறவு சங்கங்களுக்கு முதலிடம் கொடுத்து வசூலிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முதல் முதலாக நிலச்சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் கடன் கொடுத்து விட்டு பின்னால் கூட்டுறவு சங்கம் கடன் கொடுத்திருந்தால், எந்தக் கடன் முதலாவது வசூலிக்கப்படும் என்பதை அமைச்சர் விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

31st March 1964]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : லான்ட் இம்ரூவ்மெண்ட் ஆக்ட்டின் பிரகாரம் முதலாவது கடன் கொடுத்திருந்தால், அவர்களுக்கு பிரையாரிட்டி இருக்கும். லான்ட் மார்ட்கேஜ் பாங்க் முதலாவது கொடுத்திருந்தால் அவர்களுக்கு பிரையாரிட்டி இருக்கும்.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Land Improvement Loans (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 8 of 1964) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That clause 2 do stand part of the Bill."

SRI M. V. KARIVENGADAM : Sir, I move the following amendment :—

Number the existing amendment at item (i) and add the following as item (ii) :—

"After sub-section (2) of section 7 of the principal Act, add the following as new sub-section (3) and the existing sub-section (3) be re-numbered as sub-section (4) :

'(3) Loans either in the Land Mortgage Banks under the Madras Co-operative Land Mortgage Banks Act, 1943 or in the Co-operative Societies under Co-operative Societies Act, 1961 or in both shall not be a bar to grant of loan under this Act, provided the hypothecation of either the borrower to the person who furnishes collateral security affords sufficient security to the loan granted'."

SRI N. P. SENGOTTUVELU : Sir, I second the amendment.

MR. DEPUTY SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

The hon. Member Sri M. V. Karivengadam may now speak.

திரு. எம். வி. கரிவேங்கடம் : மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் திருத்தத்தின்மீது என் கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். 1934-வது ஆண்டு கூட்டுறவு நில அடமான சட்டத்தின் செக்ஷன் 28-ன்படி கூட்டுறவு பாங்குகள் விவசாயிகளுக்கு கடன் கொடுத்தால் அதற்கு பிரையாரிட்டி கிளைம் இருந்தது. 1961-வது வருஷத்திய கூட்டுறவு சங்க சட்டத்தின் செக்ஷன் 32 உட்பிரிவு 5-ன்படி முதல் சார்ஜாக அந்த கடன் இருந்து வந்தது. அதே சந்தர்ப்பத்தில் லான்ட் இம்ப்ரூவ்மென்ட் ஆக்ட் செக்ஷன் 7, பிரிவு 2-ன்படி கடன் கொடுக்கப்பட்டிருந்தால் அதற்கும் முதல் சார்ஜ் இருந்து

[திரு. எம். வி. கரிவேங்கடம்] [31st March 1964

வந்தது. இப்படி ஒன்றுக்கொன்று முரண்பட்ட வகையில் இருந்த தினுல் இந்தத் திருத்தம் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை காரணமாக சொல்லப்பட்டிருக்கிறது. இது நிச்சயமாக நீக்கப்படவேண்டியதொன்றுதான். இருந்தாலும் நமது நில அபிவிருத்திச் சட்டப்படி கடன் கொடுக்கப்பட்டிருந்தால் அதற்கு முதல் சார்ஜ் உடையதாக இதுவரை சட்டம் இருந்து வந்தது. ஆகவே கடன் கொடுக்கின்ற இந்த இலாகா, இதற்கு முதல் பொறுப்பாக இருக்கிறது என்று எண்ணி கடனை தாராளமாக கொடுத்துவந்தார்கள். அதே நேரத்தில் நில அடமான பாங்கிலும் கடன் இருக்கும். வேறு கூட்டுறவு சங்கங்களிலும் கடன் இருக்கும். இதுவரை இருந்த நிலைமை என்னவென்றுல், கூட்டுறவு சங்கங்களில் அல்லது நில அடமான பாங்க்களில் கடன்கள் இருந்தாலும், நில அபிவிருத்திச் சட்டத்தின்மூலம் கொடுக்கப்படுகிற கடனுக்கு முதல் சார்ஜ் இருக்கும் என்ற எண்ணத்தில் விவசாயிகளுக்கு தாராளமாக கடன் கொடுத்து வந்தார்கள். அவர்கள் ஏற்கனவே வாங்கியிருக்கும் கடன்களைப் பற்றி அக்கரை செலுத்த மாட்டார்கள். இப்போது இந்தத் திருத்தம் வந்திருக்கின்ற காரணத்தினுல், நில அபிவிருத்தி சட்டத்தின்படி கடன் கொடுத்திருந்தாலும், மற்ற லான்ட் மார்ட் கெஜ் பாங்க் சட்டப்படி கடன் வாங்கியிருந்தாலும்சரி, அல்லது கூட்டுறவு சங்கங்களில் கடன் வாங்கியிருந்தாலும்சரி, அதற்கு முதல் சார்ஜ் இருக்கும் என்கின்ற நிலைமை ஏற்படுகிறது. இதன் படி கூட்டுறவு சங்கங்களில் கடன் வாங்கிவிட்டு, பின்னுல் நில அபிவிருத்திச் சட்டப்படி விவசாயி கடன் வாங்கப்போனுலும் முதல் சார்ஜ் யாருக்குப் போகும் என்கின்ற சந்தேகம் ஏற்படும். இவ்விதம் சந்தேகம் ஏற்பட்ட உடன், ஏற்கெனவே கடன் இருக் கிறது. இதற்குத்தான் முதல் சார்ஜ் இருக்கும், ஆகவே கடன் கொடுப்பதில்லை என்று நில அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் கடன் கேட்கின்ற விண்ணப்பங்கள் தள்ளுபடியாகிப்போய் விடும். கொடுக்கின்ற கடனுக்கு செக்யூரிட்டி வேண்டாமா என்று அமைச்சர் அவர்கள் கேட்பார்கள். அதற்குத் தகுந்த முறையில் நான் திருத்தமும் கொடுத்திருக்கிறேன். கூட்டுறவு சங்கங்களின் மூலமாக கடன் வாங்கியிருந்தாலும் சரி, லான்ட் மார்ட்கேஜ் பாங்க் மூலம் கடன் வாங்கியிருந்தாலும் சரி, இவைகளில் கடன் வாங்கி யிருப்பதன் காரணமாக, நில அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் கடன் கொடுப்பது மறுக்கப்படக்கூடாது என்பதை உறுதி செய்ய வேண்டும். அதே நேரத்தில் அரசாங்கம் கொடுக்கின்ற கடனுக்கும் பாதுகாப்பு இருக்கவேண்டும் என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். சந்தேகங்கள் எழுகின்ற நேரத்தில் இன்னின்ன விதத்தில் விவசாயிகளுக்கு கடன் கொடுக்கப்பட வேண்டும் என்பதை சட்டத்தில் அமைத்துவிட்டால் நல்லது. சட்டத்தில் இந்தத் தலைப்பின் கீழ் விவசாயிகளுக்கு கடன் இல்லை என்று சொல்லாமல் இருக்கின்ற நிலைமைக்கு தகுந்தபடி திருத்தங் கள் கொடுத்திருக்கிறேன். இந்த முறையில் இரண்டு பாங்குகளின் கீழ் கடன் கொடுத்திருந்தாலும், நில அபிவிருத்தி சட்டத்தின்

31st March 1964] *[திரு. எம். வி. கரிவேங்கடம்]*

கீழும் கடன் வழங்கலாம். நில அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் கடன் கேட்பவர்களுக்கு செக்யூரிட்டி கொடுக்கின்ற வகையில், சொத்து மதிப்புடையவர்கள் செக்யூரிட்டி கொடுக்க முன் வந்தால் இதன்கீழ் தாராளமாக இந்தச் சட்டத்தின் வாயிலாக கடன் கொடுக்கலாம் என்கின்ற திருத்தத்தை நான் கொடுத்திருக்கிறேன்.

ஆகவே விவசாயிகளுக்கு அனாவசியமாக ஏற்படுகிற தொல்லைகளை நீக்குகிற அளவுக்கு, இலாகாக்களில் இருக்கிறவர்களுக்கு ஏற்படுகிற சந்தேகங்களைப் போக்குகிற அளவுக்கு இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, the amendment is not necessary. Under the rule, as it now exists, Rule XI of the Madras Land Improvement and Agriculturists Loans General Rules, 1933, no loan shall be granted unless the value of the security offered is at least twice the amount of the loan applied for. Loan can be granted to any individual, if the security offered is sufficient as prescribed. If the security offered for the loan is considered sufficient taking into consideration the amount of loan already obtained by the individual on the same property offered as security, loan can be granted. Of course, the bar should be removed. But this should not be by an amendment.

The amendment was by leave withdrawn.

Clause 2 was put and carried.

Clause 1, the Preamble and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Land Improvement Loans (Madras Amendment) Bill, 1964, (L.A. Bill No. 8 of 1964) be passed.

திரு. ப. உ. சண்முகம் : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நிலச் சீர்திருத்தத்திற்காக என்று தனிச் சட்டம் வைத்து கடன் கொடுக்கிறார்கள். அதே நேரத்தில் நிலத்தை அடமானத்திற்கு வைக்கிறபோது நிலத்தை சீர்திருத்துவதாக இருந்தால்தான் நில அடமான பாங்கில் பணம் கடனாகக் கொடுக்கிறார்கள். நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் நிலத்தை சீர்திருத்துவதற்காக தனிக் கடன் கொடுக்கும் நேரத்தில் நில அடமான பாங்கிலும் நிலத்தைச் சீர்திருத்துவதற்காகத்தான் கடன் என்று சொல்லும் போது ஒரே வேலைக்கு என்று இரண்டு இடத்திலும் வற்புறுத்துவது பொருத்தம் உடையதுதானா என்று அமைச்சர் யோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிலத்தை அடமானம் வைத்து கடன் வாங்குகிறவர்கள் குடும்பத்தில் இருக்கிற கடனைத் தீர்க்க நில அடமான பாங்க் மூலமாகக் கடன் வாங்குகிறார்கள். குடும்பக் கடனைத் தீர்ப்பதற்காக வாங்கும்போதுகூட, வாங்கக்கூடிய கடனில் 60 சதவீதத்தை நிலத்தைச் சீர்திருத்துவதற்காக

உபயோகப்படுத்த வேண்டும் என்றும், 40 சதவீதத்தை குடும்பக் கடனைத் தீர்ப்பதற்கு உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும் என்றும் இருக்கிறது. நிலச் சீர்திருத்தத்திற்கு என்று தனிச் சட்டம் வைத்து விட்டு, நில அடமான கூட்டுறவு சங்கம் கொடுக்கும் கடனை சீர்திருத்தம் செய்வதற்காகத்தான் கொடுப்போம் என்பது முறைதானு என்பதை யோசித்து அதற்கு ஒரு நல்ல உத்திரவைப் பிறப்பிக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, லாண்ட் மார்க்கேட்ஜ் பாங்கிலே 60 சத விகிதம் இம்ப்ரூவ்மெண்ட்டுக்கும் 40 சத விகிதம் கடனைத் திருப்பிக் கொடுப்பதெற்கென்றும் போட்ட விதியானது பணம் ப்ரொடக்ட்டிவ் எண்டெர்ப்ரைஸில்லே உபயோகப்படுத்தப்பட வேண்டுமென்று தான். ஏனென்ருல் பலர் பழைய கடனைத் திருப்பிக் கொடுக்க என்று ஏராள கடனை வாங்கி விட்டு திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் இருந்து விடுகிருர்கள். ஆகையால் கொடுத்த பணம்கூட பயனற்றுப் போய் விடுகிறது. ஆகையால்தான் சமீப காலத்தில் மீண்டும் பரிசீலனை செய்து கடனில் ஒரு தொகை இம்ப்ரூவ்மெண்ட் செய்வதற்காக இருக்க வேண்டும், ஒரு பகுதிதான் பழைய கடனைக் கொடுப்பதற்காக இருக்க வேண்டும் என்று செய்யப் பட்டது. ஆனுல் இப்போது கொண்டுவந்திருக்கிற சட்டத்தினுல் ஒன்றும் நஷ்டம் இல்லை. லாண்ட் மார்ட்கேஜ் பாங்கிலிருந்தும் பணம் கடன் வாங்கலாம். செக்யூரிட்டி போதுமானதாக இருந்தால் லாண்ட் இம்ரூவ்மென்ட் ஆக்டின்கீழ் வாங்கலாம். பத்து ஆயிரம் ரூபாய் வாங்குவதாக இருந்தால் 6,000 ரூபாய் இம்ப்ரூவ் மெண்டுக்கும், 4,000 ரூபாய் கடனைத் திருப்பிக் கொடுக்கவும் வாங்கவும் முடியும். இல்லையென்ருல் இரண்டு வித லோன்களை, இம்ப்ரூவ்மெண்ட் ஆக்ட் பிரகாரம் இம்ரூவ்மெண்ட்டுக்கு வேண்டிய கடனை வாங்கிக்கொண்டு, எந்த அளவுக்கு பழைய கடனைத் திருப்பி கொடுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு மாத்திரம் லாண்ட் மார்ட்கேஜ் பாங்கில் வாங்கிக்கொள்ள முடியும். இப்போது கொண்டு வந்திருக்கின்ற சட்டத்தில் இரண்டு விதக் கடன்கள் கொடுக்க முடியுமே தவிர இருக்கிற வசதி குறைந்து விடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Land Improvements Loans (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 8 of 1964) be passed." The motion was put and carried and the Bill was passed

(3) THE MADRAS BHOODAN YAGNA (AMENDMENT) BILL, 1964.

(L.A BILL NO. 10 OF 1964)

THE HON. SRI P. KAKKAN : Sir, I move—

that the Madras Bhoodan Yagna (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 10 of 1964) be taken into consideration.'